**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**------**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

Calender

Miscellaneous Case No. CC 101/2018
Priliminary Register

Sessions

Deposition of witness for — Prosecution PW1 / Defence / Court

Name :Sankareshwari
Father's Name :W/o. SureshKumar
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.11.2021.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது வில்லூா் கிராமத்தில் எனது பெற்றோா் வீட்டில் நான்வசித்து வருகிறேன். 1ம் எதிரி எனது கணவா். 2ம் எதிரி எனது மாமனாா். 3ம் எதிரி எனது மாமியாா். 4ம் எதிரி எனது நாத்தனாா். 5ம் எதிரி லதா எனது கணவா் 2வதாக திருமணம் செய்தவா் ஆவாா். எதிரி லதா இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளாா். 09.09.2015ம் தேதி வில்லூரில் உள்ள முருகன் கோவிலில் எனக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு எனது பெற்றோா் 25 பவுன் நகை மற்றும் ரூ.1லட்சம் ரொக்கம் ரூ.2லட்சம் மதிப்புள்ள சீா்வரிசை பொருள்கள் கொடுத்தாா்கள். நிச்சயதாா்த்தத்திற்கு ரூ.1லட்சத்தி 50 ஆயிரம் செலவு செய்தாா்கள். திருமணத்திற்கு பிறகு நான் எனது கணவா் வீட்டில் கூட்டுக்குடும்பமாக மாமனாா் மாமியாா் நாத்தனாருடன் வசித்துவந்தேன். எனது நாத்தனாரிற்கு வெளியூரில் திருமணம் நடந்தாலும் எங்கள் வீட்டில் தான் இருப்பாா். எனக்கு 20.11.2017ம் தேதி ஆண்குழந்தை பிறந்தது. குழந்தைக்கு யாதவன் என்று பெயரிட்டோம். பின்னா் ஒவ்வொரு நாளாக திருமணம் ஆனதிலிருந்து எதிரிகள் என்னை கொடுமைப்படுத்த ஆரம்பித்தாா்கள். ஜாடை மாடையாக எனது மாமியாா் மற்றும் நாத்தனாா் பேசுவாா்கள். நான் துணி காயப்போட்டிருந்தேன்

அப்போது எனது சேலையை எனது மாமனார் மற்றும் நாத்தனார் தீ வைத்துவிட்டார்கள். எதிரிகள் 1முதல் 4 பேர் நகை 25பவுன் கேட்டு கொடுமைப்படுத்தினார்கள். நான் வேலைக்கு சென்றபின்பு பீரோ சாவியை எடுத்து எதிரிகள் 1 முதல் 4 பேர் சேர்ந்து அவர்களாகவே நகையை எடுத்துக்கொண்டனர். நான் வேலைக்கு சென்றுவிட்டு இரவு 8.30மணிக்கு வந்து பீரோவில் பார்த்தால் பீரோவில் நகை இல்லை. நான் மேற்படி எதிரிகளிடம் நகையை காணவில்லை என்று கேட்டேன். எதிரிகள் என்னை அடித்தார்கள். குச்சியை வைத்து எதிரிகள் 4 பேரும் சேர்ந்து என்னை அடித்தனர். பாலில் எதையோ கலந்து கொடுத்து என்னை குடிக்கச்சொல்லி அடித்தார்கள். நான் அடிதாங்க முடியாமல் பயந்து அதைக்குடித்தேன். பின்னர் அன்று இரவு 11மணிபோல் நான் மயக்கமாகி வீட்டில் விழுந்துவிட்டேன். பின்னர் எனது மாமனார் எனது அப்பாவிற்கு போன் செய்து வரச்சொன்னார். எனது அப்பா வந்தவுடன் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்தார். ஆம்புலன்ஸ் வந்தவுடன் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். அங்கு நான் மயக்கநிலையில் இருந்தேன். என்னை யாருமே பார்க்கவரவில்லை. 3 நாட்கள் கழித்து வில்லூர் காவல் நிலையத்திலிருந்து போலிசார் வந்து என்னை விசாரித்தனர். எனது கணவர் போனில் என்னிடம் நீ உண்மையை சொன்னால் உன்னை வைத்து வாழமாட்டேன் என்று சொன்னார். அதனால் நான் போலிசாரிடம் வயிற்றுவலியால் மாத்திரை போட்டுவிட்டேன் என்று சொன்னேன். பின்னர் 5 நாட்கள் கழித்து மருத்துவமனையிலிருந்து எனது பெற்றோர் வீட்டிற்கு வந்தேன். அங்கு இரண்டுபேரையும் வைத்து மணி மாமாவும் முத்துக்கருப்பன் என்பவரும் பஞ்சாயத்து செய்தனர். பின்னர் எனது கணவரின் வீட்டு மாடியில் குடியிருக்கச்சொன்னார்கள். அங்கு குடியிருந்தபின்பு 1ம் எதிரி எனக்கு சரிவர பணம் கொடுப்பதில்லை. வாரம் 1முறை மட்டும்தான் வீட்டிற்கு வருவார். 1ம் எதிரி அடிக்கடி போனில் யாரிடமோ பேசியதால் சண்டை வந்தது. எனக்கு பின்னர் தான் தெரியும் 5ம் எதிரியிடம் பேசியுள்ளார் என்று தெரிந்துகொண்டேன். பின்னர் சண்டை அடிக்கடி வந்ததால் எனது கணவரின் தாய்மாமா மற்றும் தாய்மாமாவின் மனைவியை வரச்சொல்லி பேசி கள்ளிக்குடியில் குடிவைத்தனர். அங்கும் எதிரி 15நாட்களுக்கு ஒரு முறை வருவார். சிலநாள் வருவதே கிடையாது. ஒருநாள் எனது கணவர் எனது பெற்றோர் வீட்டில் இருந்த வாசிங்மெசினை ஆட்டோவில் வந்து எடுத்துச்சென்று மதுரை பென்னர் காலனியில் உள்ள 5ம் எதிரியின் வீட்டில் கொடுத்துவிட்டதாக ஆட்டோ டிரைவர் சொல்லி எனக்குத் தெரியும். 5ம் எதிரியிடம் எனது அப்பா விசாரித்தார். அதற்கு 5ம் எதிரி எனது மாமனார் மாமியார் நாத்தனார் ஆகியோர் சேர்ந்துதான் கல்யாணம் செய்துவைத்தனர். எனக்கு 2ம் திருமணம் என்று தெரியும் என்று 5ம் எதிரி சொல்லியுள்ளார். 5மாதம் நான் கர்ப்பிணியாக இருந்தபோது கூட எதிரிகள் என்னை பார்க்கவில்லை. பின்னர் எனது கணவர் வேறொரு திருமணம் செய்துகொண்டது தெரியவந்தது. நான் 5மாதம் கர்ப்பிணியாக இருந்தபோது எதிரிகளின் வீட்டிற்கு சென்று கேட்டேன் அதற்கு அவர்கள் இங்கு எதற்கடி வந்தாய் என்று சொல்லி அசிங்க அசிங்கமாக தேவிடியா அவுசாரி என்று எனது நாத்தனார் மற்றும் மாமியாரும் சேர்ந்து பேசினார்கள்.

எனது நாத்தனார் எனது முடியை பிடித்து இழுத்தார். எனது கணவரும் மாமனாரும் சேர்ந்து என்னை அடித்து 5மாத கர்ப்பிணி என்று கூட பார்க்காமல் இழுத்துக்கொண்டு வந்து வெளியில் விட்டனர். பின்னர் நானே எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் அளித்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு அசாஆ 1 ஆகும். திருமண பத்திரிக்கை அசாஆ 2 ஆகும். எனது கணவரும் 5ம் எதிரியும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் அசாஆ 3(6 எண்ணிக்கை) ஆகும். புகைப்படங்கள் அடங்கிய சி.டி சா.பொ.1 ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர். இந்த பிரச்னைக்கு 5ம் எதிரிதான் காரணம் எனக்கு திருமணம் நடந்தது தெரிந்தும் அவர் 2ம் திருமணம் செய்துகொண்டார். எனக்கு சீதனம் கொடுத்த வாசிங்மெசினை இன்றுவரை 5ம் எதிரிதான் வைத்துள்ளார். எனது நகை மற்றும் சீதனப்பொருட்கள் இன்றுவரை எதிரிகள் வீட்டில் தான் உள்ளது. **மருத்துவ ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்காக வழக்கு ஒத்திவைக்கப்பபடுகிறது.**